

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | அக்டோபர்13, 2022 | புரட்சி 21 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00

# இரத்தக் கலப்பு இல்லாத இனம் உலகில் இல்லவே இல்லை என்பதை நிரூபித்த மரபியல் ஆய்வாளருக்கு நோபல் பரிசு

*ஜாதியப் பெருமை பேசி ஜாதியக் கலப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ‘மனுவாதிகள்’ கருத்துகளை அறிவியல் ரீதியாக தகர்த்து எறிந்துள்ள மரபணு ஆய்வாளருக்கு இப்போது நோபல் பரிசு கிடைத்துள்ளது; அவரது பெயர் சுவாந்தே பாபோ.*

**ர. பிரகாசு**

மருத்துவப் பிரிவில் 2022ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு சுவீடன் நாட்டைச் சேர்ந்த மரபியல் ஆய்வாளர் சுவாந்தே பாபோ-விற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. உலகில் இனத்தூய்மை வாதத்திற்கு இடமில்லை, இனக்கலப்பு இல்லாத ஒரு மனித இனம் உலகில் இல்லவே இல்லை என்பதை டி.என்.ஏ. ஆய்வுகள் மூலம் நிரூபித்ததற்காக சுவாந்தே பாபோவிற்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுள்தான் உலகைப் படைத்தார், மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான உயிரினங்களையும் படைத்தார், மரம், செடி, கொடிகளை படைத்தார் என்பது உலகில் இதுவரை தோன்றிய அனைத்து மதங்களும் கூறியிருக்கும் கட்டுக்கதைகள். ஆனால் பால்வெளியில் ஒரு பெரு வெடிப்பு நிகழ்ந்தது, அதில் இருந்து கோள்கள் தோன்றின. லட்சக்கணக்கான ஒளி ஆண்டுகளில் ஏற்பட்ட பரிணாம மாற்றங்களால் பூமியில் ஒரு செல் உயிரினங்கள் உருவாகின. அதிலிருந்து நீர்வாழ் உயிரினங்கள் தோன்றின. பின்னர் நிலத்திலும் வாழும் தகவமைப்பை உயிரினங்கள் பெற்றன. அந்த வரிசையில் சுமார் 55 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் குரங்கு இனம் தோன்றியது. குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சி பெற்று மனிதன் தோன்றினான் என்கிறது அறிவியல். இவற்றை மதங்கள் முதலில் ஏற்க மறுத்தாலும் பின்னர், ஆமாம் அறிவியல் கூறுவதுதான் சரி என்று ஏற்க வேண்டிய நிலை உருவானது.

அறிவியலுக்கு ஒவ்வாத பிற்போக்குத்தனங்கள், மூட நம்பிக்கைகள், பாலினப் பாகுபாடுகள் எல்லா மதங்களிலும் நிறைந்திருந்தாலும், அடிமைத் தனத்தை ஆணிவேராகக் கொண்டு மானுட சமூகத்தைப் பிளவுபடுத்தும் கோட்பாடுகள் நிரம்பப் பெற்ற ஒரே மதமாக இந்து மதம்தான் இருக்கிறது. இந்து மதத்தைத் தவிர, உலகில் வேறு எந்த மதமும் மனிதர்களுக்குள் ஒருவர் உயர்ந்தவர், மற்றொருவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாட்டினை நிறுவவில்லை. கடவுள் மனிதர்களை சமமாக படைக்கவில்லை என்றும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நால் வர்ணங்களாகப் படைத்தார் என்றும் இந்து மதம் ஒன்றே கூறுகிறது. அதிலும் மேலே ஒருவர், கீழே ஒருவர் என அடுக்கு முறை சமுதாயமாகத்தான் கடவுள் படைத்தார், கடவுளே நினைத்தாலும் அதை மாற்ற முடியாது என்றும் வேத புராணங்கள் கூறுகின்றன. இந்த அடுக்குமுறை சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் கலந்துவிடக்கூடாது, அவர் ஜாதிக்குள், அவரவர் உட் பிரிவுக்குள்தான் இரத்தக் கலப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், இல்லையென்றால் ஜாதிப் புனிதம் கெட்டு விடும், மதப்புனிதம் கெட்டுவிடும் என்றும் மானுட சமூகத்தைப் பிளவுபடுத்தி வைத்துள்ளது பார்ப்பனியம்.

மதத்தின் பெயரால் தூய்மைவாதம் பேசுவதற்கு பார்ப்பனியம் ஜாதித் தூய்மைவாதத்தைத்தான் அளவு கோலாய் வைத்திருக்கிறது. இனத் தூய்மைவாதம் பேசுவதற்கு சில தமிழ்தேசியர்களும் ஜாதித் தூய்மை வாதத்தைத்தான் அளவுகோலாய் வைத்திருக்கின்றனர்.

இவர்களின் அடிப்படையற்ற, அறிவியலுக்கு முரணான கருத்துக்களை எப்போதும் எதிர்ப்பதே பெரியாரியம். யார் யாரை விரும்ப வேண்டும், யார் யாரை மணம் முடிக்க வேண்டும் என்பதெல்லாம் சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டும் தொடர் புடையது. இதில் தலையிட மதத்திற்கோ, ஜாதிக்கோ, மொழிக்கோ, இனத்திற்கோ உரிமையில்லை என்று பேசுவதுதான் மானுடத்தின் பக்கம் நிற்கும் அறச்செயல்.

இல்லையில்லை... எங்களுக்கு மானுடப் பற்றெல் லாம் கிடையாது... மதப்பற்றும் ஜாதிப் பற்றும் இனப் பற்றும் மட்டுமே போதும் என்று பழமைவாதம் பேசு வோருக்கு பேரிடி கொடுத்திருக்கிறார் சுவீடனைச் சேர்ந்த மரபியல் ஆராய்ச்சியாளர் சுவாந்தே பாபோ.



> மனித சமூகம் கலப்பில்லாமல் தனித்தனி குழுக்களாக வாழ்ந்திருந்தால் மற்ற டைனோசர்கள் உள்ளிட்ட பல உயிரினங்களைப் போல காலப் போக்கில் கரைந்து போயிருக்கக்கூடும்.

ஆதிகால மனிதர்களைப் பற்றிய இவரது ஆய்வு முடிவுகள், இனி உலகில் இனத் தூய்மைவாதம் பேசுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதை ஆணித்தரமாய் உறுதி செய்திருக்கின்றன.

உலகில் முதல் மனித இனம் 3 இலட்சம் ஆண்டு களுக்கு முன்பு ஆப்ரிக்காவில் தோன்றியது என இதுவரையிலான அறிவியல் ஆய்வுகள் கூறியிருக் கின்றன. இந்த ஆப்ரிக்க மனித குழுக்கள் சுமார் 60,000 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பா மற்றும் ஆசியா வழியாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கு பரவியுள்ளனர். ஆனால் ஆப்ரிக்க இனக்குழுவை சேர்ந்தவர்கள் ஐரோப்பாவையும், ஆசியாவையும் அடையும் முன்பு அங்கெல்லாம் அதற்குமுன் மனிதர்கள் இல்லையா? இருந்தார்களா? என்பதற்கான குறிப்பிடத்தகுந்த ஆதாரங்கள் இதுவரை கிடைக்காமலேயே இருந்தன.

1856ஆம் ஆண்டு ஜெர்மனியின் நியாண்டர்தால் என்னும் இடத்தில் ஆதிகால மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை மனித எலும்புக் கூடுகள் போலவே இருந்தாலும் சில வித்தியாசங்கள் இருந்ததால், மனித இனத்திற்கு நெருக்கமான எலும்புக்கூடுகள் என்றுதான் அறிவியலாளர்கள் நிறுவினர். இந்த நியாண்டர்தால் இனக்குழுவின் எலும்புக்கூடுகளுடன், இன்றைய மனிதர்களுடைய மாதிரிகளை ஒப்பிட்டு சுவாந்தே பாபோ டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தினார். இதில் நியாண்டர்தால் இனக்குழுவும், ஆப்ரிக்க இனக் குழுவும் கலந்து சுமார் 20,000 வருடங்கள் வாழ்ந்திருக் கிறார்கள் என்பதை பாபோ உறுதி செய்திருக்கிறார். அதாவது இரு குழுக்களும் ஒன்றோடு ஒன்று கலந்து இனப்பெருக்கம் நடந்திருக்கிறது என்பதை ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேபோல 2008ஆம் ஆண்டு சைபீரிய மலை களில் சில எலும்புக்கூடு பாகங்கள் கிடைத்தன. டெனிசோவா குகையில் கிடைத்த இந்த எலும்புக் கூடுகள் சுமார் 40,000 ஆண்டுகள் பழமையானது என்பதும், அவை விரல் எலும்பின் பாகங்கள் என்பதும் ஆய்வில் தெரியவந்தது. அவையும் மனித எலும்புக்கூடுகள் போலவே இருந்தாலும், சில வித்தியாசங்களால், அறிவியலாளர்களால் மனித எலும்புகள்தான் என்று அறுதியிட்டு கூற இயலவில்லை. சுவாந்தே பாபோ தனது டி.என்.ஏ. ஆராய்ச்சியில் அவர்கள் நியாண்டர்தால் இனமும் இல்லை, ஆப்ரிக்க இனமும் இல்லை புதிய இனம் என்பதை கண்டுபிடித்தார்.

ஆப்ரிக்க மனித குழுக்கள் நியாண்டர்தால் குழுக்களுடன் கலந்து பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததைப் போல, ஆசியாவிற்குள் நுழைந்து டெனிசோவா குழுக்களை சேர்ந்தவர்களுடனும் ரத்த கலப்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதை சுவாந்தே பாபோ ஆய்வுகளில் கண்டுபிடித்துள்ளார். அதற்குப் பிறகு ஆப்ரிக்க இனக்குழுக்களை சேர்ந்தவர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளனர். தென்கிழக்கு ஆசியாவில் சுமார் 6 விழுக்காட் டினருடன் டெனிசோவா இனத்தை சேர்ந்தவர்களின் டி.என்.ஏ. ஒத்துப் போகிறது. குறிப்பாக இன்றைய திபெத் மக்களிடம் அதிகமாக ஒத்துப்போகிறது. அதேபோல ஐரோப்பா மற்றும் ஆசியாவில் வாழும் இன்றைய மனித இனத்தின் டி.என்.ஏ.க்களுடன் நியாண்டர்தால் இனக்குழுவின் டி.என்.ஏ. 1-4% ஒத்துப்போகிறது. இந்த அறிவியல் உண்மைகளை பாபோ உலகுக்கு அறிவித்த அருஞ்செயலுக்காகவே 2022ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகில் கலப்பு இல்லாத ஒரு மனித இனம் இல்லை என்பது மட்டுமே பாபோவின் ஆய்வு முடிவு அல்ல. ஒரு குழு மற்றொரு குழுவுடன் இணைந்ததால் இன்றைய மனித சமூகத்திற்கு சில நல்ல ஜீன்கள் கிடைத்திருக்கின்றன என்பதும் அவரது ஆய்வில் வெளிப்பட்ட முக்கிய தகவல்களாகும். தென்கிழக்கு ஆசியாவில் மலைப்பாங்கான பகுதிகளில் வாழும் மக்கள் ஆக்சிஜன் பற்றாக்குறையை சமாளிக்க, டெனிசோவா இனக்குழுக்கள் உடனான ரத்த கலப்பு உதவியிருக்கிறது என்பதை பாபோ தனது ஆய்வில் மெய்ப்பித்திருக்கிறார்.

அலர்ஜியை கண்டுபிடிப்பது, வைரஸ் நோய் களுக்கு எதிரான போரிடும் தன்மை போன்றவை வெவ்வேறு மனித இனக்குழுக்களின் கலப்பினால் கிடைத்த நன்மைகள் என்றும் பாபோ ஆய்வில் கூறி யிருக்கிறார். எனவே மனித சமூகம் கலப்பில்லாமல் தனித்தனி குழுக்களாக வாழ்ந்திருந்தால் டைனோசர்கள் உள்ளிட்ட பல உயிரினங்களைப் போல காலப்போக்கில் கரைந்து போயிருக்கக்கூடும். பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும் மனித இனத்திற்கு இனக்கலப்பால் எதிர்காலத்தில் மேலும் பல நன்மைகள் கிடைக்கக்கூடும் என்ற முடிவுக்கும் நம்மால் வர முடிகிறது. எனவே ஜாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, மொழியின் பெயராலோ, இனத்தின் பெயராலோ இரு மனங் களின் விருப்பங்களுக்கு தடைபோடுவது, மனித இன வரலாற்றிற்கும், எதிர்கால பரிணாம வளர்ச்சிக்கும் விரோதமான செயல் என்பதை மதவாதிகள், ஜாதியவாதிகள், இனவாதிகள் உணர வேண்டும்.

இனக்கலப்பு கூடவே கூடாது என்று இடைநிலை ஜாதிகளை நிர்பந்திக்கும் செயலை பார்ப்பனியம் இப்போதும் செய்கிறது. ஆனால் அவர்களின் சந்ததிகள், கடல் தாண்டக்கூடாது என்ற மனுவின் கட்டளைகளை காற்றில் பறக்கவிட்டு இன்றைக்கு உலகம் முழுவதும் பரவிவிட்டனர். அமெரிக்கா, ஐரோப்பாவில் லட்சங்கள், கோடிகளில் ஊதியம் பெறும் அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி மதம், இனத்தை தூக்கி தூர வீசிவிட்டு ரத்த கலப்பு செய்துகொள்கிறார்கள். கமலா ஹாரிஸுக்கு அவர்கள் உரிமை கொண்டாடும் விதமே அதற்கு சிறந்த சான்றாகும். ஆஸ்திரேலியாவில் குடியேறிய தமிழ்நாட்டு பார்ப்பன பெண் ஒருவர் அந்நாட்டு பிரபல கிரிக்கெட் வீரர் மேக்ஸ்வெல்லை சமீபத்தில் திருமணம் முடித்தபோதும், இது மத புனிதத்தைக் கெடுக்கும் செயல் என்று அவர்கள் வசைபாட வில்லை, மாறாக கொண்டாடவே செய்தார்கள். அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா என உலகம் முழுவதும் இருந்து இதுபோன்ற நூற்றுக்கணக்கான உதாரணங்களை அடுக்கிவிட முடியும். எனவே ஜாதித்தூய்மை, இனத்தூய்மை என்பதெல்லாம் வளர்ச்சிக்கும், வாழ்வியலுக்கும் உதவாது என்பது பார்ப்பனர்களுக்கு நன்றாகவே தெரியும். இடைநிலை சமூகங்களும் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த ஜாதியும், எந்த மதமும் இனத்தூய்மை பேசு வதற்கு இனி இடமில்லை, மனிதன் ஆதிகாலத்தில் தோன்றியபோதே அனைத்து இனங்களிலும் ரத்தக் கலப்பு ஏற்பட்டுவிட்டது. எல்லா இனங்களிலும் ரத்தக்கலப்பு ஏற்பட்டுவிட்டது என்றாலே அது எல்லா மதங்களுக்கும், எல்லா ஜாதிகளுக்கும் பொருந்தும். அதுதான் சுவாந்தே பாபோவின் ஆய்வு களில் இருந்து மதச் சங்கங்களும், ஜாதியவாத அமைப்புகளும் உணர்ந்து திருந்த வேண்டிய செய்தி.

தலையங்கம்

## ஆர்.எஸ்.எஸ். ‘சரணாகதி’

1925ஆம் ஆண்டு ஒரு விஜயதசமி அன்று தான் ஆர்.எஸ்.எஸ். நாக்பூரில் துவக்கப்பட்டது. எனவே விஜயதசமி அன்று ஆர்.எஸ்.எஸ். மிகப்பெரிய விழாக்களை நடத்துவது வழக்கம்.

நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ் நடத்திய விஜயதசமி பேரணியை தொலைக் காட்சிகள் வெளியிட்டன. அதில் ஒரு செய்தி வெளியிடப்பட்டது.

‘ஆர்.எஸ்.எஸ் தொடங்கிய காலத்திலிருந்து முதன் முறையாக பேரணியை பார்வையிடுகிற பார்வையாளர்களில் ஒரு பெண் இப்போது தான் அழைக்கப்பட்டு இருக்கிறார்’ என்ற செய்தியை தொலைக்காட்சி ஒளிபரப்பியது. ஆர்.எஸ்.எஸ். விஜயதசமி விழாவில் பங்கெடுப்பதற்கு பார்வையாளராகவே ஒரு பெண் அழைக்கப்பட்டிருப்பது 1925க்குப் பிறகு இதுவே முதல் முறை.

ஆர்.எஸ்.எஸ்.சில் பெண்கள் யாரும் உறுப்பினராக முடியாது என்ற தடை அப்படியே இப்போதும் நீடிக்கிறது. ஆர்.எஸ்.எஸ். பேரணி அணி வகுப்பையும் தொலைக்காட்சியில் ஒளி பரப்பினார்கள். அதில் ‘சுவயம் சேவக்காக’ ஒரு பெண் கூட வரவில்லை. ஆனால், இங்கே ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பெண்களுக்காக ஆர்.எஸ்.எஸ் தனி அமைப்பை நடத்திக் கொண்டிருக்கிறது என்று அதற்கு ஒரு சப்பைக் கட்டுக் கட்டுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். உண்மையில் ‘ராஷ்ட்ர சேவிகா சமிதி’ என்ற தனி பெண்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கியது. அது குடும்ப ரீதியாக செயல்படும் அமைப்பு ஆகும். ஒரு பெண் என்பவர் ஒரு நல்ல மனைவியாகவும், மகளாகவும், தாயாகவும் குடும்பத்துக்குள் செயல்பட வேண்டும். வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது என்பது தான் ஆர்.எஸ்.எஸ் இன் தொடக்கக்காலக் கொள்கையாக இருந்தது. அயோத்தி பிரச்சனையில் பெண்களை ஈடுபடுத்த முயன்ற ஆர்.எஸ்.எஸ். பெண்களுக்காக தனியாக 5000 ஷாகாக்களை நடத்தியது.

“இந்துப் பெண்களே வீரத்தையும், நல்லொழுக்கத்தையும் விதைக்கப் போர்க் குரல் எழுப்புங்கள்” என்ற முழக்கத்தோடு அயோத்திப் பிரச்சனையில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

கர சேவை செய்ய வந்தவர்களுக்கு உணவு தயாரிக்க பெண்களை குடும்பத்தோடு ஈடுபடுத்தினார்கள். இதுதான் ஆர்.எஸ்.எஸ்.சில் பெண்களுக்கு உள்ள நிலை.

இப்படி சமூகத்தில் சரிபகுதியாக இருந்த இந்து பெண்களைப் புறக்கணித்து அவர்களைப் புண்படுத்துகிற கூட்டம் தான் இந்துக்களைப் புண்படுத்துகிறார்கள், இந்துக்களைப் புண்படுத்து கிறார்கள் என்று கூக்குரல் போட்டு வருவதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். நாக்பூரில் நூல் வெளியீட்டு விழா ஒன்றில் அவர் பேசுகையில், வர்ணம், ஜாதி அமைப்புகளை தூக்கி எறிய வேண்டும் என்று அவர் பேசியிருக்கிறார். கடந்த காலத்தில் இந்த அமைப்புகள் பாகுபாடுகள் இல்லாமல் தான் இருந்தன. இப்போது அதைப் பற்றி கேள்விகள் எழுந்துவிட்டன. எனவே, அவற்றை மறந்து விடுவோம். அது கடந்த காலமாகவே இருந்துவிட்டு போகட்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.


உளப்பூர்வமான கருத்தாக இருந்தால் உண்மையிலேயே இது வரவேற்க வேண்டிய ஒரு அறிவிப்பு தான். வர்ணத்தையும், ஜாதி அமைப்பையும் தூக்கி எறிய வேண்டும் என்று அறிவித்த ஆர்.எஸ்.எஸ். தலைவருக்கு இப்போது நாம் விடுக்கும் வேண்டுகோள் சமூக அமைப்பு சமூக பழக்க வழக்கங்கள் வழிபாட்டு முறைகள் புனித நூல்கள் என்று போற்றப்படுகிற வேதம், புராணம், இதிகாசங்கள் இவைகளில் இடம் பெற்றிருக்கின்ற வர்ணா சிரமத்தை, ஜாதி அமைப்பை நியாயப்படுத்துகிற கருத்துக்கள் அனைத்தும் காலத்துக்குப் பொருத்தமற்றவை; அவற்றைப் புறந்தள்ள வேண்டும், என்ற ஒரு கருத்தையும் மோகன் பகவத் அறிவித்து விட்டால் நாட்டில் ஒரு பெரிய பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்த நிலை உருவாகி விடும். அதை மோகன் பகவத் செய்வாரா?

பெரியாரும், அம்பேத்கரும் காலம் முழுதும் எதிர்த்த ஜாதி – வர்ணக் கட்டமைப்பை ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நாங்களும் எதிர்க் கிறோம் என்று பேச வேண்டிய நிலைக்கு இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ். தள்ளப்பட்டிருக்கிறது. இது பெரியார் அம்பேத்கருக்குக் கிடைத்த மகத்தான ஒரு வெற்றி என்று நிச்சயமாக நாம் சொல்ல முடியும்.

இனியும் ஆகமங்கள் என்ற பெயரிலும் வழிபாடு என்ற பெயரிலும் சடங்குகள் என்ற பெயரிலும் வர்ணாசிரம தர்மத்தையும் ஜாதி அமைப்பையும் கட்டி அழுது கொண்டிருக்கின்ற பார்ப்பனீயர்கள் வர்ணாசிரமவாதிகள், சனாதனவாதிகள் மோகன் பகவத்தின் இந்த கருத்துக்கு பிறகு தங்களை மாற்றிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

– புரட்சிப் பெரியார் முழக்கம் 13.10.2022

# வேத – ஆகம சாஸ்திரப் புராணங்களைக் கடுமையாக எதிர்த்தார் வள்ளலார்




வள்ளலார் தொடக்கக் காலத்தில் சைவத்திலும் முருகக் கடவுளிடமும் நம்பிக்கைக் கொண்டிருந்தாலும் அவரது சிந்தனையில் மாற்றங்கள் வந்து கொண்டிருந்தன. அவர் எழுதிய ஆறாம் திருமுறையில் சைவம், ஆகமம், வேதங்களைக் கேள்விக்கு உட்படுத் தினார். பெரியார் ஆறாம் திருமுறைப் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டாா. வள்ளலாரின் வரலாற்றில் தலைசிறந்த நூலாகக் கருதப்படும் நூல் - முனைவர் ஊரன் அடிகள் எழுதியதாகும். அண்மையில் ஜூன் 13, 2022 அன்று தமது 89ஆம் அகவையில் முடிவெய்தினார். தமிழக அரசின் விருது பெற்ற அந்த நூலிலிருந்து வள்ளலாரின் வேத ஆகம எதிர்ப்புக் கருத்துகளின் தொகுப்பு.

வேத, ஆகம, சாத்திர, புராண, இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா.

வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் இதிகாசங்கள் கூறும் கதைகளையும் கற்பனைகளையும் பெருமான் ஒவ்வார் .’கலை உரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக’ என்பார். வேதாகமங்கள் சூதாகச் சொல்லுகின்றன, உண்மையை வெளிப்படையாக உரைக்கவில்லை, இவற்றால் என்ன பயன் என்பார்.

*வேதாக மங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்*
*வேதாக மத்தின் விளைவறியீர் –சூதாகச்*
*சொன்ன அலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை*
*என்ன பயனோ இவை.* (5516)

*சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி*
*நேத்திரங்கள் போற்காட்ட நேராவே – நேத்திரங்கள்*
*சிற்றம்பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே*
*உற்றிங் கறிந்தேன் உவந்து.* (5515)

*வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்*
*விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்*
*ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி*
*உள்ளதனை உள்ளபடி உணர உரைத் தனையே*
*ஏதுமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்*
*எள்ளளவும் எண்ணம் இலேன் என்னொடுநீ புணர்ந்தே*
*தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்*
*சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.* (3767)

வேதாகமங்களெல்லாம் சாலம் எனப் பெருமானுக்கு உரைத்த இறைவன், அவற்றின் சொற்பொருளும் இலக்கியமும் பொய் எனக் கண்டறியேல் வேதாகமங்களின் உண்மை நினக்காகும், உலகர் அறிந்த வேதாகமம் பொய் எனக் கண்டுணர்வாய் எனவும் உரைத்தருளினான்.

*இயல்வேதா கமங்கள் புராணங்கள் இதிகாசம்*
*இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்*
*மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிக*
*மகனேநீ நூல் அனைத்தும் சாலம்என அறிக*
*செயல் அனைத்தும் அருள் ஒளியால்காண்கென எனக்கே*
*திருஉளம்பற் றியஞான தேசிகமா மணியே*
*அயல்அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற*
*ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே.* (4176)

*தோன்றியவே தாகமத்தைச் சாலம் என உரைத்தோம்*
*சொற்பொருளும் இலக்கியமும்*
*பொய்எனக்கண் டறியேல்*
*ஊன்றியவே தாகமத்தின் உண்மை நினக்காகும்*
*உலகறிவே தாகமத்தைப் பொய் எனக்கண் டுணர்வாய்*
*ஆன்றதிரு அருட்சைங்கோல் நினக்களித்தோம் நீயே*
*ஆள்கருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே*
*ஏன்றதிரு அமுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே*
*இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே.* (4177)

இந்து வேதாகமங்களில் மாத்திரம்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கிறது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படி யிருக்கிறதாகக் காணப்படுமாகில் அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதன் ஏகதேசங்களென்பது உண்மை. - உபதேசக் குறிப்புகள், பக்கம் 333

இந்து வேதாகமங்களில் என்றது இருக்கு முதலிய வேதங்களை மட்டுமன்று ; தேவார திருவாசக முதலிய திருமுறைகளையும் தமிழ்ச் சாத்திரங்களையும் சேர்த்தேயாகும். மற்ற எந்தச் சமயங்களிலும் என்றது ஏனைய புறச்சமயங்களை.

வேத, ஆகம, புராண, சாத்திரங்களைப் பெருமான் முற்றிலும் கொள்ளவு மில்லை, முற்றிலும் தள்ளவுமில்லை. கொள்ளற்குரிய அளவு கொண்டார். தள்ளற்குரிய அளவு தள்ளினார். ஒரு பழுத்த சைவ சித்தாந்தி, சிறந்த சன்மார்க்கி, அனுபவ ஞானி வேதாகமங்களை எவ்வளவுக்குக் கொள்ளலாகுமோ அவ்வளவுக்குக் கொண்டார். எவ்வளவுக்குத் தள்ளலாகுமோ அவ்வளவுக்குத் தள்ளினார்.

# இராஜராஜசோழன் நடத்திய பார்ப்பனிய ஆட்சி

***இராஜ இராஜ சோழன் பதவிக்கு வருவதற்கு முன்பே நடந்த சம்பவங்கள் தான் 'பொன்னியின் செல்வன்' கதைக்களமாக இருந்தாலும் சோழ மன்னர்கள் அனைவருமே பார்ப்பனர்களின் அடிமை ஆட்சியைத் தான் நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதே உண்மையான வரலாறு.***

"தமிழ்த் தேசியத்திற்கு முன்னோடி", "தமிழர்களின் பொற்காலம்" என்று வர்ணிக்கப்படுற இராஜ ராஜனைப் பற்றிய கல்வெட்டு ஆராய்ச்சி மற்றும் வரலாற்று அறிஞர்களின் நூல்களைப் பார்க்கும் பொழுது இராஜராஜசோழன் ஆட்சி தமிழர்களின் பொற்கால ஆட்சியாக இருக்கவில்லை பார்ப்பனர்களுக்கே அது பொற்காலமாக விளங்கியிருக்கிறது என்பது தெளிவாகிறது!

பார்ப்பனர்களை சேனாதிபதிகளாகவும், அவைத் தலைவர்களாகவும், அரியணை யேற்றி அழகு பார்த்தவன் இராஜராஜன்!

களப்பிரர்கள் காலத்தில் காயடிக்கப்பட்ட பார்ப்பன மேலாதிக்கம், மீண்டும் தலை விரித்தாடியது இராஜராஜன் காலத்தில். அருண்மொழித் தேவன் என்ற தமிழ்ப் பெயரை இராஜராஜசோழன் என்று வடமொழிக்கு மாற்றிக் கொண்டவன்!

**அடிமைகள்**

- சோழர் காலத்தில் அடிமை முறை இருந்ததை பல்வேறு கல்வெட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன. தாசியின் மக்கள், பெற்றோரால் விற்கப்பட்டவர் போன்ற பலவகையான அடிமைகள்!. பொருளைப் போன்றே இந்த அடிமைகளும் விற்பனை மற்றும் இடமாற்றம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். விற்கப்படும் அடிமைகளுக்கு மாட்டைப்போல் சூட்டுக் கோல் அடையாளங்கள் இடப்பட்டிருக் கிறது. பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் "ஆள்விலை பிரமான இசைவுச்சீட்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்லா யிரம் அடிமைகளை கொடுமைப்படுத்தி அவர்கள் உழைப்பில் தஞ்சை பெரிய கோவிலை எழுப்பி புண்ணியம்(?) தேடிக் கொண்டான் இராஜராஜன்! .
- கோவிலில் பணிபுரிந்தவர்களின் நிலங்கள் கூட பறிமுதல் செய்யப்பட்டு கோவில் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. தங்கள் நிலங்களை பறிகொடுத்தவர்கள் அரசை எதிர்த்து தீக்குளித்த செய்தியை புஞ்சை செப்பேடுகள் கூறுகின்றன.

**தேவரடியார்கள்!**

- கோவிலில் பணிபுரிவதற்கென்று பெண் களை நியமனம் செய்தான் இராஜராஜன். தஞ்சை பெரிய கோவிலில் மட்டும் நானூறுக்கும் மேற்பட்ட பெண்களை நியமித்திருந்தான். அவர்களுக்கு திருமணம் செய்துகொள்ளும் உரிமை முற்றிலு மாக மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் தேவரடி யார்கள் என்று அழைக்கப்பட்டனர். கோவில் தளத்தைச் சுற்றி தேவரடியார் களுக்கென்று தனிக்குடியிருப்பு பகுதியை ஏற்படுத்தி அவை தளிச்சேரி என பெயரிடப்பட்டது.
- உலகமகா தேவியார், சோழ மாதேவியார், அபிமான வல்லியார், திரைலோக்கிய மாதேவியார், பஞ்சவன் மாதேவியார், பிருதிவி மாதேவியார், இலாட மாதேவி யார், மீனவன் மாதேவியார், நக்கன் தில்லை அழகியார், காடன் தொடங்கி யார், கூந்தன் விரானியார், இளங்கோன் பிச்சியார் என 15க்கும் மேற்பட்ட மனைவி மார்களை வைத்திருந்தவன் இராஜ ராஜன்!
- சோழர் காலத்தில் தென்னாற்காடு மாவட்டம் எண்ணாயிரம் எனும் ஊர் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப் பட்டு அங்கு வடமொழிக் கென்றே தனிக் கல்லூரி உருவாக்கப்பட்டது. கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைத்து செலவுத்தொகையும் அரசால் மான்யமாக வழங்கப்பட்டது. அங்கு பயிற்று வித்த ஆசிரியர்கள், பயின்ற மாணவர்கள் அனைவரும் பார்ப்பனர் களே! இக்கல்லூரிக்கென 300 ஏக்கர் நிலம் தானமாக அரசனால் வழங்கப்பட்டது.

இதே போன்று வடாற்காடு மாவட்டம் கப்பலூர் கிராமத்திலும், செங்கற்பட்டு மாவட்டம் ஆனூரிலும் வடமொழி பாட சாலைகள் நிறுவப்பட்டன. புராணங்கள், இதிகாசங்கள், சோம சித்தாந்தம், ராமானுஜ பாடியம், மீமாம்ச வியாக்ரணம் போன்ற வடமொழி இலக்கி யங்களே அங்கு பயிற்றுவிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய சூரர்களால் தமிழ் தேசியத் தின் பிதாமகன் என்று சித்தரிக்கப்படும் இராசராசன் காலத்தில் தமிழ் மொழிக் கென எந்த ஒரு தனித்த பாட சாலையும் நிறுவப்பட்டதாக தெரிய வில்லை!

**வலங்கை-இடங்கை!**

- வலங்கை இடங்கை குல வேறுபாடு இராஜராஜன் காலத்தில் ஓங்கியிருந்தது. இந்த இரண்டு பிரிவு களிலும் இடம் பெறாத தங்களை மேன்மக்களாக கருதி கொண்டிருந்த பார்ப்பனக்கூட்டம் வலங்கைப் பிரிவினரை ஏவிவிட்டு இடங்கைப் பிரிவினருக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் விளைவித்தது. இந்தக் கொடுமையைத் தாங்க இயலாமல், இடங்கை சாதியினர் ஒன்றுகூடி கண்டனத் தீர்மானம் இயற்றியதோடு,அரசுக்கு எதிராக போர்க் கொடி தூக்கிய நிகழ்ச்சிகள் நித்த வினோத வளநாட்டுக் காந்தார நாட்டைச்சேர்ந்த இராச மகேந்திர சதுர்வேதி மங்கலம் கிராமத்தில் (நித்த வினோத வளநாடு என்பது தற்போதைய பாபநாசம் நன்னிலம் பகுதிகள்) நடை பெற்றுள்ளது.
- பார்ப்பனர்களை எதிர்த்து கலகம் செய்பவர்களுக்கு இருபதினாயிரம் காசுகள் தண்டம் விதிக்கப்பட்டு கட்டத் தவறியவர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

**குடவோலை முறை!**

- கிராமங்களில் குடவோலைமுறை இருந்தது. கிராமங்கள் பல குடும்புகளாக பிரிக்கப்பட்டு, குடும்பின் சார்பில் ஒரு ஆண் மகன் பிரதிநிதியாக நியமிக்கப் படுவான். அவனுக்கு குறைந்த பட்சம் 1/4 வேலி நிலம் சொந்தமாக இருக்கவேண்டும். பார்ப்பனர்களுக்கோ 1/8 வேலி நிலம் இருந்தாலே போதும் என சலுகை காட்டப் பட்டது. அப்படி குடும்பின் சார்பில் நியமிக்கப்படும் பெயர்கள் தனித்தனியாக ஓலைகளில் எழுதி ஒரு குடத்தில் இட்டு குலுக்கல் முறையில் சபையின் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த சலுகையாலும் பார்ப்பனர்களுக்கு நிலங்கள் அவ்வப்போது தானமாக வழங்கப்பட்டு வந்ததாலும், கிராமசபை அங்கத்தினராக பெரும்பாலும் பார்ப் பனர்களே ஆதிக்கம் செலுத்திவந்தனர்.
- வேளாண் மக்களும், பார்ப்பனர்களும் அதிகம் வசித்த கிராமங்களில் இரண்டு சபைகள் தனித்தனியாக இயங்கி வந்தன. பார்ப்பனர்களின் விருப்பப்படி அத்தகைய கிராமங்களை ஒரே சபையின் கீழ் கொண்டு வரத் திட்டமிட்டான் இராஜராஜன். வேளாண் மக்கள் தங்கள் நிலங்களை பார்ப்பனர்களுக்கு விற்றுவிட வேண்டும் என்று உத்தரவிட்டு அதை நிறைவேற்றும் பொருட்டு அதிகாரிகளையும் நியமித் தான்.
- பார்ப்பனர்களுக்கு பொன்னையும் பொருளையும், நிலபுலங்களையும் தானமாக வாரி வழங்கினான் இராஜ ராஜன்! பார்ப்பனர்களுக் கென்றே கிராமங்கள் பிரத்யேகமாக தானமாக வழங்கப்பட்டு, அகரம், அக்கிரஹாரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் என்று அழைக்கப் பட்டன. அப்படி தானமாக வழங்கப்பட்ட பகுதியில் வசித்த பார்ப்பனர்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
- கோவில்களில் பறிமாறப்படும் உணவுப் பந்திகளில் பார்ப்பனர்களுக்கு முதலிடம் தரப்பட்டது. தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானத்தின் தெற்குப்பக்க சுவரில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் "காலம் 1014 ஸ்ரீஇராஜராஜன் - தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கு சோழ மண்டலத்திலும், பாண்டிய மண்டலத் திலும், தொண்டை நாடான ஜெயங் கொண்ட சோழ மண்டலத்திலுமுள்ள 'பிரம்ம தேயங்களை' சேர்ந்தவர்கள் தங்கள் ஊரில் பண்டாரம் (பூசை) செய்வதற்கு பிராமணர்களையும், திருபரிசாரகம் (சமையல்) செய்வதற்கு மாணிகளையும் (திருமணம் ஆகாதவர்கள்) கணக்கு எழுத கரணர் களையும், சந்திர ஆரியர்கள் உள்ளவரை நியமிக்க அனுப்ப வேண்டும்" என்று குறிப்பிடப்பட் டுள்ளது. பார்ப்பனர்கள் வாழும் பிரம்மதேயத்தில் வசிக்கக்கூடிய பார்ப்பனர்கள் மட்டுமே கடவுளுக்கு பூசை செய்ய கருவறைக்குள் அனுமதிக்கப்பட்டனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.
- கிராமசபைகளிலும் அரசின் முடிவு களிலும் கூட பார்ப்பனர்களின் அதிகாரம் கொடிகட்டியிருக்கிறது. அவர்களின் ஆலோசனைப்படியே தீர்ப்புகள் வழங்கப் பட்டிருக்கிறது.

**சூழ்ச்சியில் ஆட்சி!**

பார்ப்பனர்களுக்கு பொற்கால வாழ் வளித்த 'சூத்திர' இராஜராஜனுக்கு அவன் கட்டிய கோவிலுக்குள் சிலை எழுப்ப அனுமதி மறுத்தது பார்ப்பனீயம்! ஒன்றிய ஆட்சி கட்டுப்பாட்டிலுள்ள தொல்பொருள் துறை அனுமதிக்காததால் முதல்வராக இருந்த கலைஞர், கோயிலுக்கு வெளியே இராஜ ராஜன் சிலையை நிறுவினார்.

இன்றளவும் பார்ப்பன அடிவருடிகளாக விளங்கிக் கொண்டிருக்கும் தமிழினத் துரோகிகளுக்கு தஞ்சை பெரியகோவில் வெளியே நின்று காவல் காத்துக் கொண்டிருக்கும் இராஜராஜசோழன் சிலை ஒரு பாடமாக அமையட்டும்!

தஞ்சை பெரியகோயில் வீதியில் வீரப் பரம்பரை!

**– கி. தளபதிராஜ் – முகநூலில்**

## வள்ளலாரின் ஆரிய மொழி எதிர்ப்பு

*வள்ளலார், 'சத்தியப் பெரு விண்ணப்பத்'தில், தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக இறைவனுக்கு நன்றி கூறும் பகுதி வருமாறு:*

*"எல்லாம் ஆனவராயும் ஒன்றும் அல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே!*

*இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற **'ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது'**, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவும் இனிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தால் கிடைத்த **'தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து'** அத்தென்மொழிகளால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்."*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY   REG.NO.TN/CC(S)DN/459/22-24  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நங்கவள்ளிப் பகுதியிலில் கழகத்தில் இணைந்த 30 தோழர்களுக்கு பயிற்சி வகுப்பு



நங்கவள்ளி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 07.10.2022 வெள்ளி அன்று காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நங்கவள்ளி சமுதாயக் கூடத்தில் புதிய தோழர்களுக்கான ‘பெரியாரியல் ஓர் அறிமுகம்’ எனும் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இவ்வகுப்பிற்கு நகரச் செய லாளர் பிரபாகரன் அனைவரை யும் வரவேற்று புதிய தோழர் களின் அறிமுகத்தோடு துவக்கி வைத்தார். காலை முதல் அமர்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘தமிழகம் பெரியாருக்கு முன் பின்’ எனும் தலைப்பிலும், மதியம் இரண்டாம் அமர்வில் கழக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் ‘திராவிடர் விடுதலைக் கழகத் தின் செயல்பாடுகள்’ குறித்தும், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, ‘கழகத்தின் களப் பணிகள்’ குறித்தும் உரையாற்றினர்.

காலையிலும் மதிய உணவு இடை வேளைக்குப் பின்பும் வகுப்புகள் துவங்குவதற்கு முன் கழக சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு, மேட்டூர் நகர கழக பொருளாளர் முத்துக்குமார், சங்ககிரி சாரள் மிரியம் ஆகியோர் பகுத்தறிவு பாடல்களைப் பாடினர்.

புதிய தோழர்கள் 30 பேர் உட்பட 50 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கு குறிப்பு நோட்டுகளை கே.ஆர். தோப்பூர் கண்ணன், கழக வெளியீட்டு புத்தகங்களை மேட்டூர் நகர கழகத் தலைவர் மார்ட்டின் வழங்கினர்.

புதிய தோழர்களின் அறிமுகத் திற்கான வகுப்பினை நங்கவள்ளி கிளைக் கழகத் தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இவ்வறிமுக வகுப்பு சிறப்பாக நடைபெற தோழர்கள் நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன், கண்ணன், சந்திரசேகர், ஹரிகரன் மற்றும் கிளைக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# இந்தியாவை இந்தி நாடாக்க ஒன்றிய ஆட்சி தீவிரம்: தமிழகம் கொந்தளிக்கிறது

இந்தியாவை இந்திநாடாக்க அமீத்ஷா தலைமையிலான நாடாளுமன்றக் குழுப் பரிந்துரைத்துள்ளது. தேர்தலில் வடமாநிலங்களின் வாக்குகளைக் குறி வைத்து இந்த அதிரடி நடவடிக்கையில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி இறங்கியுள்ளது. இந்த அறிவிப்பால் தமிழகம் கொந்தளித்துள்ளது.

அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்ற குழு, முதல் முறையாக 1976ம் ஆண்டில் அலுவல்பூர்வ மொழி சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இக்குழுவில் மக்களவை எம்பி.க்கள் 20, மாநிலங்களவை எம்பி.க்கள் 10 பேர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

தற்போது ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் இக்குழு செயல்படுகிறது. இக்குழு அதன் 11வது அறிக்கையை ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் கடந்த மாதம் சமர்ப்பித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் வருமாறு:

- இந்தி மொழி பேசும் மாநிலங்களில் ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ், ஒன்றிய பல்கலைக் கழகங்கள், கேந்திரிய வித்யாலயா மற்றும் நவோதயா பள்ளிகளில் இந்தி மொழியிலும், பிற மாநிலங்களில் உள்ளூர் மொழியான தாய்மொழியிலும் பயிற்றுவிக்க வேண்டும்.
- இந்தி மொழியை ஐநா.வின் அலுவல் மொழிகளில் ஒன்றாக்க வேண்டும்.
- இந்தி மொழிக்கு ‘ஏ’ பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டு, 100 சதவீதம் பயன்படுத்தப்பட வேண்டும். விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே ஆங்கில மொழியை பயன்படுத்தலாம்.
- நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழில்நுட்பம், தொழில்நுட்பம் அல்லாத கல்வி நிறுவனங்களிலும் இந்தி அல்லது தாய்மொழி வழியில் பயிற்றுவிக்க வேண்டும்.
- கட்டாயமாக ஆங்கிலம் இருந்தே ஆக வேண்டும் என்ற படிப்புகளுக்கு மட்டுமே ஆங்கில வழியில் பயிற்று விக்க வேண்டும்.
- அரசு பணியாளர் தேர்வுகளில் ஆங்கில வினாத்தாள் முறையை ஒழித்து விட்டு, இந்தியை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
- பயிற்சி நிறுவனங்களில் இந்தியை பயன்படுத்த வேண்டும்.
- கேள்விதாள்களை ஆங்கிலத்தில் அளிப்பது ஒழிக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தும் இந்தியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.
- தொழில்நுட்ப கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் இந்தியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.
- கல்வி நிறுவனங்களில் இந்தி பயிற்று மொழியாக்கப்படாமல் அதனை பொது மொழியாக்க முடியாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வள்ளலார் வைதீக எதிர்ப்பு கருத்தரங்கம்: சென்னை மாவட்டக் கழகம் முடிவு



சென்னை மாவட்ட திவிக கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் இன்று 04.10.22 காலை 10:30 மணியளவில் தலைமை அலுவல கத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் -

- சமகால அரசியல் சூழல் குறித்த விவாதம்
- பெரியார் முழக்கம் சந்தா 1000 இலக்காக வைத்து சேர்ப்பது
- சென்னை மாவட்ட கழகத்தின் எதிர்கால திட்டங்கள், ஆகியவைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

வட சென்னை, திருவல்லிக் கேணி, மயிலை, அடையாறு, திருவான்மியூர், நங்கநல்லூர், எம்.ஜி.ஆர். நகர், சூலை, ராமாபுரம் ஆகிய பகுதிகளுக்கு புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

முன்னதாக, கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், “தமிழ்நாட்டில் பார்ப்பனிய மதவாதம் காலூன்று வதற்கு எப்படி திட்டமிட்டு காய் நகர்த்தி வருகின்றன என்பதை விளக்கினார். கட்சிகளை உடைத்தல்; ஊடகங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்; தமிழ்நாட்டில் இரண்டாவது இடத்தில் பா.ஜ.க. இருப்பது போன்ற பிம்பங்களைக் கட்டமைத்தல்; இந்த செயல் திட்டங்களுக்காகப் பணத்தை பெருமளவு செலவு செய்தல் போன்ற விரிவான தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். உண்மைக்கு மாறான பா.ஜ.க.வின் பரப்புரைகளை நாம் எப்படி சந்திக்க வேண்டும் என்பது பற்றியும் வள்ளலார் விழாவை வேத வைதீக எதிர்ப்போடு முன்னெடுக்கலாம்” என்ற கருத்தையும் முன் வைத்து உரையாற்றினார்.

கழகத்தின் எதிர்கால நடவடிக் கைகள் பற்றியும், கொள்கை அணுகுமுறைகளையும் விவரித் தார். தொடர்ந்து, தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர் ஆகியோர் மாவட்ட கழகத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினர்.

கலந்துரையாடலில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ நிதியாக திருவல்லிக்கேணி பகுதி செய லாளர் அருண் குமார் ரூ.10000/-யை கழகத் தலைவர், பொதுச் செயலாளரிடம் வழங்கினார்.

மாவட்ட கலந்துரையாடலில், ஆலந்தூர் பகுதியைச் சேர்ந்த அருண்ராஜ், போரூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ், ஓட்டேரி பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தோழர்களுக்கு, ‘திராவிடப் பெரியார் யாருக்கு எதிரி?’ நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கி வரவேற்றார்.

## நன்கொடை

கழகத் தலைமை அலுவலகத்தில் 06.10.2022 அன்று காலை 10 மணியளவில் நீலாவதி - பாலாஜி இணையரின் சுயமரியாதைத் திருமணம் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது. இணையர் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் வளர்ச்சி நிதியாக 2000 ரூபாய் வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 13th October 2022

OWNER AND PUBLISHER BY :  K. RAJENDRAN,  FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT  LILLY SOOSAI OFFSET,  NEW NO.8,  OLD NO.12/1,  MOHAMMED USAIN LANE,  ROYAPETTAH,  CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN